ஓம்
சிவமயம்

# மலேசிய அருள்நெறித் திருக்கூட்டம்
# கோலாலும்பூர்

அருள்நெறி நிலையம் 17, ஜாலான் செக்கோர், ஆஃப் ஜாலான் ஹலிமாதோன்,
3-வது மைல் ஜாலான் கிள்ளான் லாமா, 58000 கோலாலம்பூர்
http://arulnerimalaysia.org

தலைவர் : 012-363 3446
செயலாளர்: 019-359 3860

## திருவெம்பாவைத் திருநாட்கள்
# திருவாதவூரடிகள் புராணப் படிப்பு
## 04-01-2025 முதல் 13-01-2025

வாதவூர் அந்தணர் தந்திரு
வாய்மை விளங்கு திருக்கதை
ஓதினர் அன்புடன் ஒண்செவி
ஊடு முகந்தது கேட்டவர்
போதமெய்ஞ் ஞானம் உறும்சுக
போகம் உடன் புகழ் பெறுவர்கள்
தீதில் பவங்கள் தொலைந்து பின்
சேர்குவர் வண் சிவலோகமே

- திருவாதவூரர் புராணம், திருவடி பெற்ற சருக்கம், செ. 34

அருள்நெறிச் செல்வர்களே, வணக்கம்!

நிகழும் மங்களகரமான குரோதி ஆண்டு **மார்கழி மாதம் 20-ம் நாள்** (ஆங்கிலம் 04-01-2025) **சனிக்கிழமை** முதல் **மார்கழித் திங்கள் 29-ம் நாள்** (ஆங்கிலம் 13-01-2025) **திங்கட்கிழமை** வரை அருள்நெறி நிலையத்தில் பத்து (10) நாட்களுக்குத் திருவெம்பாவைத் திருநாட்களை முன்னிட்டு இரவு மணி 7.30 தொடக்கம், இரவு மணி 9.00 வரை **20-ம் ஆண்டு திருவாதவூரடிகள் புராணப் படிப்பு** மிகச் சிறப்பாக நடைபெறும். கடவுண்மா முனிவர் அருளிச் செய்த திருவாதவூரடிகள் புராணச் செய்யுட்களை இலங்கையிலிருந்து வருகை புரியும் **சைவநீதி ஆன்மீகச் சஞ்சிகை ஆசிரியர், சிவத்தமிழ்ச்செல்வர் சித்தாந்தச்செம்மணி சைவப்புலவர் செல்லையா நவநீதகுமார் M.A ஐயா** அவர்கள் விளக்கி உரை வழங்குவார்கள்.

மெய்யன்பர்கள் அனைவரும் தவறாமல் வருகை புரிந்து சிறப்பிப்பதுடன், இச்சிவபுராணப் படிப்பினைக் கேட்டு பயனுறுமாறு அன்புடன் அழைக்கின்றோம். நிகழ்வின் இறுதியில் சிற்றுண்டி வழங்கப்படும்.

பத்து (10) நாட்களுக்கும் அனைத்து ஏற்பாடுகளையும் செய்து தரும் அருள்நெறி அன்பர் **அமரர் உயர்திரு ஐ. குலவிரசிங்கம் ஐயா அவர்களுக்கும்**, அவர்தம் குழுவினருக்கும் மற்றும் கலந்து கொள்ளும் மெய்யன்பர்கள் அனைவருக்கும் நன்றி! நன்றி!!

## மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

இக்கண்,
செயலவையின் ஆணைப்படி
**ச. மனோகரன்**

*Designed by* : **NTP Print Station** Contact : +6012-2130672 Email : ntpprint224@gmail.com,